MAY 2023 **P/ID 35327/PTL4T**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. மறைந்துபோன தமிழ்க் காப்பியங்கள் சிலவற்றை எழுதுக.

2. சுத்தானந்த பாரதியின் பாரத சக்தி மகா காவியம் பற்றி நீர் அறிவன யாவை?

3. கோவலனின் குடிப்பெருமை எத்தகையது?

4. இருபெருங் குரவர் என்று சிலம்பு யாரைச் சுட்டுகிறது?

5. கண்ணகியை யாரிடம் அடைக்கலப்படுத்தினர்?

6. சீறாப் புராணம் - சொற்பொருள் எழுதுக.

7. ஓகை என்று தேம்பாவணி எந்த மெய்ப்பாட்டைக் குறிக்கிறது?

8. ஆழி சூழுலகு - பொருள் கூறுக.

9. பிரிந்த மகனைக் கண்ட பெற்றோர் யாவர்?

10. அப்பூதி மகன் செய்தது என்ன?

11. இராமனின் சாரதி யார்?

12. ஆண்டகை - பொருளுரைக்க.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. தன்னிகரிலாத் தலைவன் எத்தகையவன்?

14. கோவலன் கொலையுண்ட நிகழ்வை விவரிக்க.

15. நடுகற் காதையின் செய்திகளைப் பட்டியலிடுக.

16. சீறாவில் தமிழ் மரபுகள் பின்பற்றப்பட்டுள்ளனவா?

17. அப்பர் மீதான பக்தி, அப்பூதியின் வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கம் யாது?

18. 'அப்பால் செல்க' என்று மகேந்தரனிடம் தேர்ச் சாரதி கூறியது என்ன?

19. உலகம் வளம்பெறத் தோன்றிய நாதன் என்று தேம்பாவணி பாராட்டுவது யாரை? விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் ஆகுமாற்றை நிறுவுக.

21. வஞ்சிக் காண்டத்தில் காணலாகும் புறப்பொருள் கூறுகளை வெளிப்படுத்துக.

22. அப்பூதியின் செயல் கண்டு அப்பர் வியந்தவாற்றை எடுத்துரைக்க.

23. இராமனை அறப்போர் வீரனாக அடையாளப்படுத்துக.

24. பல சமயக் காப்பியங்களைப் பெற்று ஒளிரும் தமிழின் மேன்மையைப் பாராட்டுக.

———————